25—

கால்நடை கிளை நிலையம்

***39485—திரு. சி.வி. இராஜேந்திரன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பர்கூர் தொகுதி, பர்கூர் ஊராட்சி ஒன்றியம், குட்டூர் ஊராட்சி, ஆம்பள்ளி கிராமத்தில் கால்நடை கிளை நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு திருத்திய விடையை பேரவைக்கு அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் தொகுதி, பர்கூர் ஊராட்சி ஒன்றியம், குட்டூர் ஊராட்சி, ஆம்பள்ளி கிராமத்தில் சுமார் 4,784 மாட்டினங்கள், சுமார் 700 ஆட்டினங்கள் மற்றும் 100 கோழியினங்கள் உள்ளன. மேலும், கால்நடை கிளை நிலையம் அமைக்கத் தேவையான 3,000—க்கும் அதிகமான கால்நடை அலகுகள் உள்ளதால், அங்கு கால்நடை கிளை நிலையம் அமைப்பதற்கு சாத்தியக்கூறுகள் உள்ளன. ஆகவே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய ஆம்பள்ளி கிராமத்தில் கால்நடை கிளை நிலையம் அமைக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி. இராஜேந்திரன் அவர்கள்.*

திரு. சி.வி. இராஜேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மக்களால் நான், மக்களுக்காகவே நான்' என்று வாழ்ந்து, மண்ணைவிட்டு மறைந்தாலும், மக்கள் மனதில் நீக்கமற நிறைந்திருக்கும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) சோதனைகளை சாதனைகளாக்கி, அம்மா அவர்களின் வழியில், அடுக்கடுக்கான*

2019 ஜனவரி 7]

திட்டங்களைச் செயல்படுத்தி, முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு 11,286 கோப்புகளில் கையெழுத்திட்டு, கோப்புகளே நிலுவையில் இல்லையென்ற சாதனை நாயகன், விவசாயிகளின் தோழன், (மேசையைத் தட்டும் ஒலி) கொங்குநாட்டு சிங்கம், தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு அண்ணன் அவர்களை வணங்குகிறேன். முதலமைச்சருக்கு உறுதுணையாக கட்சியையும், ஆட்சியையும் சிறப்பாக நிருவகித்துவரும் தென்பாண்டிச் சிங்கம் மாண்புமிகு அண்ணன் துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புயல் வருவதற்கு முன்பே முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுத்தும், 'கஜா' புயலால் பாதிக்கப்பட்ட டெல்டா மாவட்ட மக்களின் துயர் துடைக்க இதுவரையில், 235 கோடி ரூபாயை ஒதுக்கியும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு தற்போது பல்வேறு திட்டங்களை அறிவித்தும் செயல்படுத்திவரும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும் நன்றியையும், பாராட்டையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

'பொங்கல்' திருநாளாம், 'தமிழர் திருநாளை' தமிழ்நாட்டு மக்கள் சிறப்பாகக் கொண்டாட, அம்மா வழியில் பச்சரிசி, சர்க்கரை, முந்திரி, உலர் திராட்சை, செங்கரும்பு மட்டுமல்லாது ரூ.1,000/—மும் வழங்கியதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய தொண்டர்களின் சார்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும் கோடானுகோடி நன்றிகளை உரித்தாக்கிக்கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னுடைய பர்கூர் சட்டமன்றத் தொகுதியில் நான் கேட்டிருந்த குட்டூர் ஊராட்சி, ஆம்பள்ளி கிராமத்தில் கால்நடை கிளை நிலையம் அமைக்கப்படும் என்ற உறுதியினை அளித்த மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல, பர்கூர் சட்டமன்றத் தொகுதி, காவேரிப்பட்டினம் ஒன்றியம், கீழ்க்குப்பம் ஊராட்சி, கீழ்க்குப்பம் கிராமத்தில் கால்நடை கிளை நிலையம் அமைத்துத் தர வேண்டுமென்று மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களைத் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவேரிப்பட்டினம் ஊராட்சி ஒன்றியம், அரசம்பட்டி கிராமத்தில் ஒரு கால்நடை மருந்தகமும், நாகரசன்பட்டி கிராமத்தில் ஒரு கால்நடை மருந்தகமும் செயல்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புதிய கால்நடை கிளை நிலையம் கோரும் கீழ்க்குப்பம் கிராமத்திலிருந்து இவை சுமார் 8 முதல் 10 கிலோ மீட்டர் தொலைவில் இயங்கி வருகின்றன. கீழ்க்குப்பம் கிராமத்தைச் சுற்றியுள்ள பாடூர், செல்லகுட்டபட்டி, கோட்டப்பட்டி ஆகிய கிராமங்களில் சுமார் 3,500 பசுவினங்களும், 800 ஆட்டினங்களும், 2,300 கோழி இனங்களும் இருக்கின்றன. ஆக மொத்தம் 6,600 கால்நடைகள் உள்ளன. மொத்தம் 3,600–க்கும் மேற்பட்ட கால்நடை அலகுகள் கீழ்க்குப்பம் கிராமத்தைச் சுற்றியுள்ள கிராமங்களில் பராமரிக்கப்படுவதால், அங்கு புதிய கால்நடை கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் உள்ளன. எனவே, துறை அலுவலர்கள்மூலம் கள ஆய்வு மேற்கொண்டு, அரசின் கொள்கை முடிவுக்குட்பட்டு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் கனிவான கவனத்திற்கு எடுத்துச்சென்று, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய கீழ்க்குப்பம் கிராமத்தில் புதிய கால்நடை கிளை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–40

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழ்நாட்டில் இரண்டாம் வெண்மைப் புரட்சியை உருவாக்கும் வகையில், கிராமப் பொருளாதாரத்தை மேம்படுத்துவதில் கிராமப்புறப் பெண்களை ஊக்குவிக்கவும், மாநிலத்தில் கலப்பின பசுக்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவும், விலையில்லா கறவைப் பசுக்கள் மற்றும் வெள்ளாடுகள் வழங்கும் திட்டத்தை அறிமுகப்படுத்தினார்கள். விலையில்லா கறவைப் பசுக்கள் வழங்கும் திட்டத்தின்கீழ் 75,448 கறவைப் பசுக்களும், விலையில்லா வெள்ளாடுகள்

2019 ஜனவரி 7]

மற்றும் செம்மறியாடுகள் வழங்கும் திட்டத்தின்கீழ் 8,72,152 பெண்களுக்கு 34,88,608 வெள்ளாடுகள் மற்றும் செம்மறியாடுகளும் வழங்கப்பட்டன. இதன்வாயிலாக, கிராமப்புற ஏழையெளிய பெண்கள் பொருளாதாரத்தில் ஏற்றம் அடைந்துள்ளனர் என்பதை முதலில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் காட்டிய வழியில், விதி 110–ன்கீழ், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் நாட்டுக் கோழி வளர்ப்புத் திட்டம் செயல்படுத்தப்படுமென இம்மாமன்றத்தில் அறிவித்தார்கள். இத்திட்டத்தின்மூலம் அனைத்து ஊராட்சிகளையும் உள்ளடக்கி, கிராமப்புற ஏழைப் பெண்கள் 77,000 நபர்களுக்கு தலா 50 நாட்டுக் கோழி குஞ்சுகள் மற்றும் அவற்றைப் பாதுகாத்து வளர்க்க ஏதுவாக ரூ.2,500/– மதிப்புடைய கூண்டுகளுடன் இத்திட்டம் 50 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்படவுள்ளது. இத்திட்டத்தை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் வரும் 10–1–2019 அன்று தொடங்கி வைப்பார்கள் என்பதை இம்மாமன்றத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி. இராஜேந்திரன் அவர்கள்.*

திரு. சி.வி. இராஜேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு கால்நடை கிளை நிலையங்கள் அமைத்துத் தர வேண்டுமென்ற எனது கோரிக்கையினை பரிசீலனை செய்து, வழங்கப்படுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அவற்றை இந்த நிதியாண்டிலேயே வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தங்கள் வாயிலாக இந்த நேரத்திலே நன்றியினைக் கூறி, அமர்கிறேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 26, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ராஜேந்திரன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*